மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, 1977-ஆம் ஆண்டுத் திட்டமிட்டபடியே மண் அணை கட்டி முடிக்கப்பட்டது. கல் அணையைப் பொறுத்தவரையில் திட்டமிட்டபடி நவம்பர் 77-இல் கட்டியிருக்க வேண்டும். 'That is the masonry dam' ஆனல் சற்றுத் தாமதம் ஏற்பட்டு விட்டது. 31—1— 78-இல் 99 சதவீதம் வேலை முடிக்கப்பட்டு விட்டது. இத் திட்டத்தில் முன்னேற்றம் திட்டமிட்டபடியே நடந்து கொண்டிருக்கிறது. வேலை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது என்று மாண்புமிகு உறுப்பினரவர்கள் கூறினர்கள். அது சாதாரணமாக மழை நாட்களில் நடக்காமல் இருந்திருக்கலாம், அதைப்பற்றிக் குறிப்பிடுகிருர்கள் என்று கருதுகிறேன். அந்தத்திட்டத்தின் மூலம் எவ்வளவு நிலம் பாசனம் பெறும் என்ற விவரம் இங்கே இல்லை.

குமரி மாவட்டத்தில் நீர்ப்பாசனக் கால்வாய்கள்

திரு. மி. வின்சென்ட்

* 733 வின—திரு. பொ. விஜயராகவன்: மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா ?

(அ) குமரி மாவட்டத்தின் நீர்ப்பாசன கால்வாய்கள் எத்தனை ஆண்டுகளுக்கு முன்னல் அமைக்கப்பட்டன ?

(ஆ) அவைகளை நவீனப்படுத்துவதற்கு அரசு என்ன என்ன முயற்சிகள் எடுத்துள்ளது ?

(இ) அனந்தனறு கால்வாயை நவீனப்படுத்த இந்த அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:

(அ) பழைய நீர்ப்பாசன கால்வாய்கள் நூறு ஆண்டுகளுக்கு மேற்பட்டவை.

(ஆ) இது தல அலுவலர்களால் ஆய்வு செய்யப்பட்டு வருகிறது. படிப்படியாக மாநிலத்திலுள்ள பழைய நீர்ப்பாசன அமைப்புகள் நவீனப்படுத்துவது அரசின் நோக்கமாகும்.

(இ) இதற்கென திட்டம் தற்போது ஆய்வில் உள்ளது.

TAMIL NADU LEGISLATURE LIBRARY
25 செப் 1978
MADRAS

திரு. மி. வின்செண்ட் ; பேரவைத் தலைவரவர்களே, அனந்தனாறு வெட்டப்பட்ட நேரத்தில் 175 கன அடி கொள்ளும் அளவிற்குதான் வெட்டப்பட்டது. ஆனால் 250 கன அடி தண்ணீர் விடப்பட்டதால்தான் கடைவரம்புகளுக்குப் போதுமான தண்ணீர் கிடைக்கும். எனவே, அனந்தனாறும் அதன் பிரிவாம் காரவிளை சேனல், கோட்டாறு சேனல், அத்திக்கடை சேனல், ஆசாரிப்பள்ளம் சேனல், தெங்கம்புதூர் சேனல் ஆகிய இந்த ஐந்து சேனல்களுக்கும் கான்க்ரீட் போட்டு 30 கன அடி தண்ணீர் கொள்ளும் அளவிற்குக் கரை கட்டி உயர்த்த மதிப்பீடு செய்யப்பட்டு தண்ணீர்ப் பிரச்சினையைத் தீர்க்க இந்த அரசு முயற்சியெடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் நான் கன்னியாகுமரி மாவட்டத் திற்குச் சென்று இருந்த பொழுதும் இந்தக் கருத்தை என்னிடத் தில் எடுத்துச் சொன்னார்கள். அந்த அனந்தனாறு கால்வாய்ப் பாசனத்தைச் செம்மைப்படுத்த வேண்டுமென்பதில் இந்த அரசுக்கு அக்கறை உண்டு. ஆகவே, அவர்கள் குறிப்பிட்ட காரியத்தை நிறைவேற்ற அரசு கூடிய சீக்கிரம் நடவடிக்கை எடுக்கும்.

திரு. பொ. விஜயராகவன் : பேரவைத் தலைவரவர்களே, இந்தக் கால்வாய்கள் நூறு ஆண்டுகளுக்கு முன்னாலே உள்ளவை என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். கடந்த போகத்தில் உபரியாகத் தண்ணீரிருந்தும் ஆயிரக்கணக்கான ஏக்கர் கடை வரம்பு நிலங்களுக்குத் தண்ணீர் கிடைக்காமல் இருந்தது. எனவே, இதை எவ்வளவு சீக்கிரம் நவீனப்படுத்த முடியுமோ அவ்வளவு சீக்கிரம் நவீனப்படுத்த வேண்டும். இப்பொழுதுள்ள புதிய தேவைகளுக்கேற்ப தண்ணீர் விடுவதில் தாமதம் உள்ளது. அதைக் கருத்திற்கொண்டு அங்கே சிறிய கால்வாய்களுக்கும் சிமெண்ட் லைனிங் போடும் முயற்சியில் அரசு ஈடுபடுமா? அதற் கான திட்டத்தை விரைவில் தயாரித்து அங்குள்ள விவசாய மக்களின் தண்ணீர் துயர் தீர ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் ; தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்களுடைய யோசனை அரசு கருத்திற் கொள்ளத் தக்கது.

திரு. தே. ஞானசிகாமணி : தலைவரவர்களே, இதுபோல் குமரி மாவட்டத்திலுள்ள விறப்பாறு இடதுகரைக் கால்வாய்க்கு சிமெண்ட் பிளாஸ்டிங் போட உத்தேசமுண்டா? அதோடு கூட மடிச்சல் கால்வாய் போன்ற கிளைக் கால்வாய்கள் இன்னும் அரைகுறையாக இருக்கின்றன. அந்த அரைகுறையை மாற்றி எல்லாயிடங்களிலும் வேலை செய்து முடிக்க இப்பொழுது அரசுக்கு உத்தேசமுண்டா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, அரசு பரிசீலிக்கும்.

கௌசிகா, அர்ஜுனா ஆறுகளின் குறுக்கே அணை

*734 வினா திரு. ரா. கு. பெருமாள் ; மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா?

(அ) இராமநாதபுரம் மாவட்டம், விருதுநகர் வழியே செல்லும் கௌசிகா ஆறு மற்றும் அர்ஜுனா ஆறுகளின் குறுக்கே அணை கட்டும் திட்டம் ஏதேனும் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அத்திட்டம் எப்பொழுது நிறைவேற்றப்படும்?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :

(அ) ஆம்.

(ஆ) இத் திட்டங்கள் முன்னோடி ஆய்வு நிலையில் இருக்கிறது.

திரு. ரா. கு. பெருமாள் : இந்தத் திட்டங்கள் எப்பொழுது நிறைவேற்றப்படும் என்று அறிய விரும்புகிறேன். அதே நேரத்தில் வைப்பாறை கிராமத்தின் குறுக்கே ஒரு மேம்பாலம் இருக்கிறது. அந்த மேம்பாலத்தைத் தடுத்து, ஸ்குரூ ஷட்டர் அமைத்தால், ஏறத்தாழ 9,000 ஏக்கர் புஞ்சை நிலங்கள் நஞ்சை நிலங்களாக மாறும். ஆகவே, அந்தத் திட்டம் எப்பொழுது நிறைவேற்றப் படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் ; தலைவரவர்களே, அர்ஜுனா நதியின் குறுக்கே, ஆனைப்பாறை நீர்த்தேக்கம் திட்டம் முதலில் திட்டமிடப்பட்டது. ஆனால் அந்தப் பகுதியிலுள்ள மண் வேளாண்மைக்கேற்றதல்ல என்று விவசாயத் துறை கூறிய காரணத்தினால் அந்தத் திட்டம் கைவிடப்பட்டது.

அர்ஜுனா நதியும், வைப்பாறும் சேரும் இடத்தில் இருக்கன்குடி கிராமத்தின் அருகே மற்றொரு நீர்த்தேக்கம் அமைக்க வேண்டி முன்னோடி ஆய்வு செய்யப்பட்டு வருகிறது.

கௌசிகா நதியும், அர்ஜுனா நதியும் சேரும் இடத்தில் மற்றொரு நீர்த்தேக்கம் அமைக்க முன்னோடி ஆய்வு செய்யப்பட்டு வருகிறது.